


**28. 08. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. ஜன்தன் வங்கி கணக்கு திட்டத்தால் நாட்டுமக்கள் அனைவரும் முன்னேறி வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. கிராமப்புறங்களில் பெரும்பாலான வங்கிகணக்குகள் தொடங்கப் பட்டுள்ளதால் மக்களின் வாழ்க்கைதரம் மற்றும் பொருளாதாரம் உயர்ந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டுள்ளார்.

3. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பேணிகாத்து தொழில் செய்வதற்கான சூழல் மேம்படுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. நீலகிரி மாவட்டத்தில் இன்று ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

5. சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் கலியாண்ட பூனாச்சா, தைவானின் **Pruchya** இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>ஜன்தன் யோஜனா</u>

பிரதமரின் ஜன்தன் யோஜனா வங்கி கணக்கு திட்டம் இன்றுடன் 11 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

இந்நாளையொட்டி பிரதமர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கடைகோடி மக்களுக்குமான வங்கி கணக்கு திட்டத்தால் நாட்டுமக்கள் அனைவரும் முன்னேறி வருவதாக கூறியுள்ளார்.

மக்களின் கண்ணியம், ஆற்றல் இதன்மூலம் மேம்பட்டுள்ளதாகவும், இதுவே இத்திட்டத்தின் சாதனை என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த 2014-ம் ஆண்டு தொடங்கிவைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் நாடுமுழுவதும் பணபரிமாற்றம் எளிதாக்கப்பட்டுள்ளது.

சேமிப்பு கணக்கு, கடன், காப்பீடு, ஓய்வூதியம் போன்ற அடிப்படை நிதி சேவைகள் அனைவருக்கும் எளிதாக்கப்படுவதை இத்திட்டம் உறுதிசெய்கிறது.

❖❖❖❖❖❖❖

<u>நிர்மலா சீதாராமன்</u>

கிராமப்புறங்களில் பெரும்பாலான வங்கிகணக்குகள் தொடங்கப் பட்டுள்ளதால் மக்களின் வாழ்க்கைதரம் மற்றும் பொருளாதாரம் உயர்ந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு திட்டத்தின் கீழ் 56 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும், இதில் 56 சதவிகிதம் மகளிர் கணக்குகள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் 94 சதவிகிதம் பேர் தற்போது வங்கி கணக்கு வைத்துள்ளதாக கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் அரசின் நலத்திட்டங்கள் நேரடியாக மக்களை சென்றடைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் பெரும்பாலான கணக்குகள் கிராமப்புறங்களிலும் புறநகர் பகுதிகளிலும் தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ் திருச்சி ஸ்ரீரங்கம் மத்திய பாரத வங்கியில் 5 ஆயிரம் பேர் கணக்கு வைத்துள்ளதாக இதன் கிளை மேலாளர் திரு.விவேகானந்தன் கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

வேலூரை சேர்ந்த ஜன்தன் யோஜனா திட்ட பயனாளி தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜப்பானில் நாளை நடைபெறும் 15-வது இந்திய, ஜப்பான் வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்

8-வது முறையாக ஜப்பான் செல்லும் பிரதமர், அந்நாட்டு பிரதமர் ஷிகரு இஷிபாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை மேற்கொள்கிறார்.

பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம், படைப்பாற்றல் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், பிராந்திய உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்தும் இருதலைவர்களும் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

பிரதமரின் ஜப்பான் பயணத்தின் போது பல்வேறு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளதாக ஜப்பானுக்கான இந்திய தூதர் திரு. சிபி ஜார்ஜ் இன்று டோக்கியோவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தமது பயணத்தின் 2-ம் கட்டமாக வரும் 31-ம் தேதி சீனா செல்லும் பிரதமர், டியான்ஜினில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்பதோடு பல்வேறு நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

கடந்த 2017-ம் ஆண்டிலிருந்து இந்தியா ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

ஜவுளித்துறை

இந்திய ஜவுளித்துறைக்கு உதவும் வகையில் பருத்தி மீதான இறக்குமதி வரி விலக்கை வரும் டிசம்பர் 31-ம் தேதிவரை நீட்டித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே அடுத்தமாதம் 30-ம் தேதிவரை வரிவிலக்கு அளித்திருந்த நிலையில் இந்த உத்தரவு இன்று வெளியானது.

ஏற்றுமதியாளர்களை மேலும் ஆதரிக்கும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖❖

ஜீதேந்திரசிங்

இமாச்சல பிரதேசத்தின் காங்ரா மற்றும் சம்பா மாவட்டங்களில் பெய்த கனமழை வெள்ளத்தில் சிக்கி தவித்த 3 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்டோரை தேசிய பேரிடர் மீட்புபடை பத்திரமாக மீட்டுள்ளது.

இந்நிலையில் பியாஸ் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சண்டிகர் மணாலி தேசிய நெடுஞ்சாலை அடித்து செல்லப்பட்டது.

இதனிடையே ஜம்முகாஷ்மீரில் இன்று வானிலை மேம்பட்டுள்ளதாகவும், அதீத மழை எச்சரிக்கை திரும்பப் பெறபட்டுள்ளதாகவும் மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

தேசிய விளையாட்டுகள்

நாடுமுழுவதும் தேசிய விளையாட்டு தின கொண்டாட்டங்கள் நாளைமுதல் வரும் 31-ம் தேதிவரை நடைபெறவுள்ளன.

அனைவரும் ஒன்றிணைந்து விளையாடி ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என விளையாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் 2-வது மாநில மாநாட்டில் சென்னையில் இன்றுமாலை பங்கேற்கிறார்.

தென்னிந்தியாவின் முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான இயந்திர வர்த்தக கண்காட்சியை தொடங்கிவைக்கும் முதலமைச்சர் மாநாட்டு மலரை வெளியிடவுள்ளார்.

இதனிடையே மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பேணிகாத்து தொழில் செய்வதற்கான சூழல் மேம்படுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

தடையற்ற மின்சாரம், போக்குவரத்து வசதிகள் என அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கி இளம் தலைமுறையினருக்கு திறனளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாட்டில் மகளிர் விடியல் பயணம் மகளிரிடையே சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 750 கோடி முறை மகளிர் பயணம் மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

கூமாபட்டி

விருதுநகர் மாவட்டம் கூமாபட்டி பிளவக்கல் அணை பகுதியில் உள்ள பூங்காவை மேம்படுத்த 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

சுற்றுச்சுவர் நுழைவு வாயில், நடைப்பாதை, குழந்தைகள் விளையாடுமிடம், உடற்பயிற்சி கூடம், செல்ஃபி பாயிண்ட் உள்ளிட்ட நவீனவசதிகளுடன் இப்பூங்கா மறுசீரமைக்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖

பொறியியல் கல்லூரி

தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் 98 சதவிகிதத்திற்கு மேல் மாணாக்கர் இடங்கள் நிரம்பியுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

மொத்தமுள்ள ஒருலட்சத்து 90 ஆயிரத்து 494 இடங்களில் ஒருலட்சத்து 53 ஆயிரத்து 966 இடங்கள் தற்போது நிரம்பி முன்னெப்போதும் இல்லாத அளவில் சாதனை படைத்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

கோவை வாய்ஸ்

தொடர்மழை காரணமாக கோவை குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே நீலகிரி மாவட்டத்தில் இன்று ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

கோவை திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

## இருவரி

திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் சார்பிலான வேலைவாய்ப்பு முகாம் ஜமால் முகமது கல்லூரியில் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

குறைந்தபட்சம் 8-ம் வகுப்பு கல்வி தகுதியுடையவர்கள் இதில் பங்கேற்கலாம்.

புதுக்கோட்டையில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் பங்கேற்க விரும்புவோர் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை தொடர்பு கொள்ளலாம என ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறும் என ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வகை மனநல நிறுவனங்களும், இன்னும் ஒருமாத காலத்திற்குள் ஆணையத்தில் முறையாக பதிவு செய்தல் வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர். திருமதி. துர்காமூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற உரிய ஆவணங்களுடன் நாளைக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

திருச்சி மாவட்டத்தில் விநாயகர் சிலை ஊர்வலத்தை முன்னிட்டு நாளை பிற்பகல் முதல் நாளைமறுநாள் அதிகாலை வரை போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை முன்னிட்டு செங்கோட்டை தாலுக்காவில் உள்ள பள்ளிகளுக்கு இன்று பிற்பகல் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

## நாகை வாய்ஸ்

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா நாளைமாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

..வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖

## டென்னிஸ்

சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் கலியாண்ட பூனாச்சா, தைவானின் **Pruchya Isaro** இணை - ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

## பேட்மிட்டன்

பாரீஸில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து சீனாவின் வாங்கை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணையும்,

கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ்கபிலா, தனிஷா கிறாஸ்டோ இணையும் இன்று களமிறங்குகிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖